# பெரியாழ்வார்
# திருநாள் பாட்டு

இன்றைப் பெருமை அறிந்திலையோ ஏழை நெஞ்சே !
இன்றைக்கென் ஏற்றம் எனில் உரைக்கேன் - நன்றி புனை
பல்லாண்டு பாடிய நம் பட்டர் பிரான் வந்துதித்த
நல் ஆனியில் சோதி நாள்

மாநிலத்தில் முன் நம் பெரியாழ்வார் வந்துதித்த
ஆனி தன்னில் சோதி என்றால் ஆதரிக்கும் - ஞானியர்க்கு
ஒப்போர் இலை இவ்வுலகு தனில் என்று நெஞ்சே!
எப்போதும் சிந்தித்திரு

மங்களாசாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்கள் ஆர்வத்து அளவு தான் அன்றி - பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர் பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்

கோதிலவாம் ஆழ்வார்கள் கூறு கலைக்கெல்லாம்
ஆதி திருப்பல்லாண்டு ஆனதுவும் - வேதத்துக்கு
ஓம் என்னும் அது போல் உள்ளதுக்கெல்லாம் சுருக்காய்
தான் மங்கலம் ஆதலால்

உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர் கலை தான்?
உண்டோ பெரியாழ்வார்க்கு ஒப்பொருவர்? - தண் தமிழ் நூல்
செய்தருளும் ஆழ்வார்கள் தம்மில் அவர் செய் கலையில்
பைதல் நெஞ்சே! நீ உணர்ந்து பார்

---